# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை** : திரு. **மகேசன் காசிராஜன்,** இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

******

**ஆணை எண்: 231 /பேரூ/2024**
**நாள் : 06.03.2025**

திரு. சு. ஜானகிராமன்,
அம்மாப்பேட்டை,
தஞ்சாவூர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
அம்மாப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம். – எதிர் மனுதாரர்

தஞ்சாவூர் மாவட்டம், அம்மாப்பேட்டை, கதவு எண்.1, கே.ஆர்.கே.தெரு என்ற முகவரியை சேர்ந்த திரு. சு. ஜானகிராமன் என்பவரது 15.10.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 17.10.2024 அன்று பெறப்பட்டு, 231/பேரூ/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தஞ்சாவூர் மாவட்டம், அம்மாப்பேட்டை, கதவு எண்.1, கே.ஆர்.கே.தெரு என்ற முகவரியை சேர்ந்த மனுதாரர் திரு. சு. ஜானகிராமன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு தனது 15.10.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:

எனது வீட்டின் கீழ்திசையில் புல எண்.420/5ல் திரு. சண்முகசுந்தரம் என்பவரின் மனைவி திருமதி. ஜெயந்தி என்பவர், அம்மாப்பேட்டை பேரூராட்சியில் அனுமதி பெற்ற வரைபடத்தை மீறி, ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் கட்டுவதால், எனக்கு கிடைக்க வேண்டிய காற்று, வெளிச்சம் போன்ற வசதி உரிமை பாதிக்கப்படுவதால், ஆக்கிரமிப்பை இடித்து, அனுமதி பெற்ற வரைபடத்தின்படியே கட்டுமானம் செய்வதற்கு ஆவன செய்யுமாறு கோரியுள்ளார்.

2. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 06.12.2024 நாளிட்ட அறிவிப்பின் மூலம் அம்மாப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

3. அம்மாப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 09.01.2025 நாளிட்ட அறிக்கையில் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார்.

திரு. சு. ஜானகிராமன் என்பவர் அம்மாப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சியில் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் மனுதாரரின் வீட்டிற்கு அருகில் திருமதி. ஜெயந்தி க/பெ. சண்முகசுந்தரம் என்பவர் பேரூராட்சியால் ஒப்புதல் வழங்கப்பட்ட வரைப்பட அனுமதிக்கு மாறாக வீடு கட்டி வருவதாகவும் அதனை அகற்றிட உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருந்தார். இதன் தொடர்ச்சியாக மனுதாரரது வீட்டிற்கு அருகில் வீடு கட்டி வரும் திருமதி. ஜெயந்தி க/பெ. சண்முகசுந்தரம் என்பவருக்கு விளக்கம் அளிக்க பேரூராட்சியால் அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது.

திருமதி. ஜெயந்தி க/பெ. சண்முகசுந்தரம் என்பவர் தனது 06.01.2025 நாளிட்ட கடிதம் வாயிலாக தனது விளக்கத்தினை நேரில் எழுத்துப்பூர்வமாக தெரிவித்திருந்தார். அதில் திருமதி. ஜெயந்தி என்பவர் தான் பழைய வீட்டின் தாய் சுவர் மீது ஏற்றி கட்டியுள்ளேன். தாய் சுவற்றிலிருந்து 1 ½ அடி அளவுக்கு எனக்கு இடம் உள்ளது. இதனை தெரிவித்து திரு. ஜானகிராமன் என்பவரிடம் கேட்டதற்கு பிரச்சனை செய்ததால் 16.07.2024 அன்று அம்மாப்பேட்டை காவல் நிலையத்தில் புகார் செய்தோம். இப்பிரச்சனை தொடர்பாக எங்கள் இருவரையும் காவல் நிலையம் அழைத்து சர்வேயர் வைத்து அளந்து பிரச்சனையை தீர்த்துக்கொள்ள வேண்டுமென காவல் துறையால் தெரிவிக்கப்பட்டது. ஆனால் திரு. ஜானகிராமன் இதற்கு கட்டுப்படாததால் நான் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளேன் என தெரிவித்து கடிதம் அளித்துள்ளார்.

எனவே ஸ்தலம் நேரில் ஆய்வு செய்யப்பட்டதில் திருமதி. ஜெயந்தி க/பெ. சண்முகசுந்தரம் என்பவர் அவரது கடிதத்தில் தெரிவித்துள்ளபடி பழைய தாய் சுவற்றின் மேல் சுவர் எழுப்பி கட்டடம் கட்டியுள்ளார். மேலும் மனுதாரர் திரு. சு. ஜானகிராமன் என்பவர் கீழ்ப்புறம் உள்ள திருமதி. ஜெயந்தி என்பவர் வீட்டின் தாய் சுவற்றில் அவரது சுவற்றை மோதி கட்டியுள்ளார் என தெரிய வருகிறது.

மேலும் திருமதி. ஜெயந்தி க/பெ. சண்முகசுந்தரம் என்பவர் தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் மாவட்ட முனிசிப் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளதாகவும், நீதிமன்றத்தின் தீர்ப்பின் அடிப்படையில் நடந்துகொள்வதாக திருமதி. ச. ஜெயந்தி என்பவரால் 06.01.2025 அன்று கடிதம் அளித்துள்ளார் என்ற விபரம் மேலான தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரின் முறையீட்டு மனு, அம்மாப்பேட்டை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது.

தஞ்சாவூர் மாவட்டம், அம்மாப்பேட்டை இடத்தை சார்ந்த மனுதாரர் திரு. சு. ஜானகிராமன் என்பவர் தனது 15.10.2024 நாளிட்ட முறையீட்டு மனுவில் தனது வீட்டின் கீழ்திசையில் புல எண்.420/5ல் வசிக்கும் திருமதி. ஜெயந்தி என்பவர் அம்மாப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சியின் வரைபட அனுமதிக்கு மாறாக கட்டடம் கட்டியுள்ளதால், தனது வீட்டில் போதிய காற்று மற்றும் வெளிச்சமின்றி பாதிக்கப்படுவதாக புகார் தெரிவித்துள்ளார்.

மேற்காணும் மனுதாரரின் புகார் மனு குறித்து, திருமதி ஜெயந்தி என்பவர் தன்னுடைய வீட்டின் தாய் சுவரிலிருந்து 1 ½ அடி உயர்த்தி கட்டியுள்ளதாகவும், இது தொடர்பாக மனுதாரரர் திரு. ஜானகிராமன் புகார் தெரிவித்ததைத் தொடர்ந்து காவல் நிலையத்தில் திருமதி. ஜெயந்தி என்பவரால் புகார் தெரிவிக்கப்பட்டதில், ஒரு நில அளவையர் மூலம் இடத்தினை அளந்து

பிரச்சினையை தீர்த்து கொள்ளலாம் என காவல் துறை அறிவுறுத்தியும் மனுதாரர் திரு. ஜானகிராமன் கட்டுப்படாததால், திருமதி. ஜெயந்தி என்பவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்துள்ளார் என்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை வாயிலாக தெரிய வருகிறது.

எனவே, திருமதி. ஜெயந்தி என்பவருக்கு தன்னுடைய பழைய வீட்டின் தாய் சுவரிலிருந்து 1 ½ அடி இடம் தனக்கு பாத்தியப்பட்டது என்பதால் திருமதி. ஜெயந்தி என்பவரால் பாபநாசம், மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து Caveat Application தாக்கல் (C.O.P. No.5 of 2025) செய்யப்பட்டு, வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்பதை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் ஆவணத்தின் மூலம் தெரிய வருகிறது.

மேற்காணும் சூழ்நிலையில் 2014ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10(3) (b)-ன்படி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என கீழ்க்கண்டவாறு வரையறுக்கப்பட்டுள்ளது:

Tamil Nadu Local Bodies Ombudsman Act, 2014

Sec. 10(3) The Ombudsman shall not enquire into matters relating to:-

(a) Xxxxxx

(b) Any matter in respect of which an enquiry has been ordered under the Commission of Inquiries Act 1962 or any matter pending before a Court.

இந்நிலையில் மனுதாரர் புகாராக தெரிவிக்கும் திருமதி. ஜெயந்தி என்பவரால் அம்மாப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சியால் வழங்கப்பட்ட வரைபட அனுமதிக்கு மாறாக விதிமீறி கட்டப்பட்ட கட்டடம் குறித்து, திருமதி. ஜெயந்தி என்பவரால் பாபநாசம், மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித் துறை நடுவர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு (வழக்கு எண். C.O.P. No.5 of 2025) வழக்கு நிலுவையில் உள்ள நிலையில், மேற்காணும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் நடுவர் சட்டம் பிரிவு 10(3)(b)ன்படி, இப்புகாரினை விசாரிக்க இயலாது என்பதால், இப்பொருள் தொடர்பான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025 ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 06ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சிஅமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. சு. ஜானகிராமன்,
கதவு எண்.1, கே.ஆர்.கே.தெரு, அம்மாப்பேட்டை,
தஞ்சாவூர் மாவட்டம் - 614 401

2) செயல் அலுவலர்,
அம்மாப்பேட்டை தேர்வுநிலை பேரூராட்சி,
தஞ்சாவூர் மாவட்டம் - 614 401

3) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம். ஆர்.சி நகர், சென்னை –600 028

4) இணைஇயக்குநர்/ஒருங்கிணைப்பு அலுவலர் ( Nodal Officer)
(பெயரிடப்பட்ட உறையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், எம். ஆர்.சி நகர், சென்னை – 600 028

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்.

// ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

7/3/25
செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032